ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம: ஸ்ரீமத் வரத குரவே நம:

# ஸ்ரீரங்கம் ஸ்ரீமந் மணவாளமாமுனிகளின் திருவத்யயந (தீர்த்தம்) உத்ஸவம் - மாசி - க்ருஷ்ண துவாதசி

எழுதியவர்: ஸ்ரீஉ.வே. சதாபிஷேகம் கோவிந்த நரசிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்



மாமுனிகள் - ஸ்ரீரங்கம்

## தனியன்

துலாயா மதுலே மூலே பாண்ட்யே குந்தீபுரீவரே ।
ஸ்ரீஸேஷாம்ஸோத்பவம் வந்தே ரம்யஜமாதரம் முநிம் ॥

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் ।
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ॥

## ஸ்ரீரங்கத்தில் நிகழும் ஸ்ரீமந் மணவாளமாமுனிகளின் திருவத்யயந (தீர்த்த) உத்ஸவ வைபவம்

ஓர் ஆசார்ய ஸார்வபௌமர் நலமந்தமில்லதோர் திருநாட்டை அலங்கரித்த (பரமபதித்த) நாளை ப்ரதி வருடமும் கொண்டாடும் போது அந்நாள் திருவத்யயநம் (தீர்த்தம்) எனப்படும்.

பொதுவாக ஒருவர் முடிந்த நாளை திதி, திவஸம், ஸ்ரார்த்தம் என்பர். ஆனால் ஸ்ரீவைஷ்ணவர்கள் பரமபதித்த நானள திருவத்யயநம் (தீர்த்தம்) என்பார்கள். இப்படி இந்நாளை அழைப்பதற்கு முக்யகாரணம் - அன்றைய தினம் திருவாய்மொழி சேவிக்கச் செய்வதும், ஸ்ரீபாததீர்த்தம் பெறுவதுவுமாம். இவைகள் இரண்டுமே தம் தம் பிதாவைக் குறித்தும், ஆசார்யனைக் குறித்தும் புத்ரர்களும், சிஷ்யர்களும் அவச்யம் செய்யத்தக்கதாகும். முக்யமாக சிஷ்யன் தம் ஆசார்யன் பிறந்த நாளையும் பரமபதித்த நாளையும் வருடந்தோறும் கொண்டாட வேண்டும். பிறந்த நாளைக் கொண்டாடுவதை திருநசஷத்திர பரிபாலனம் என்றும், பரமபதித்த நாளைக் கொண்டாடுவதை திருவத்யயந தீர்த்த பரிபாலனம் என்றும் சொல்லுவார்கள்.

பரமபதித்த நாளுக்கு முன் தினம் இரவு திருவாய்மொழி தொடங்கி இரண்டு பத்து மட்டிலும் சேவிக்க வேண்டும். கோஷ்டிக்கு தோசை வடை, சுண்டல் விநியோகம் பண்ண வேண்டும். மறுநாள் திருவாய்மொழி முழுவதும் சேவிக்கப் பண்ணி சாத்துமுறையை நடத்தி ஸ்வாசார்யனின் பாதுகையில் ஸ்ரீபாத தீர்த்தத்தையும் பெற வேண்டும். புத்ரன் தன் பிதாவுக்கும் திருவாய்மொழி சேவை நடத்தி முறைப்படி ஸ்ராத்தம் நடத்தி நிமந்த்ரண ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்ரீபாததீர்த்தம் பெறவேணும். ஆகவே அந்நாள் திருவத்யயநம் (தீர்த்தம்) என வழங்கப்படுகிறது.

ஆழ்வார் தொடங்கி எம்பெருமானார் நடுவாக மாமுனிகள் ஈறாகவுள்ள நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஓராண்வழி குரு பரம்பரையிலுள்ள ஆசார்யர்கள் அனைவருக்கும், மற்றுமுள்ள ஆசார்யர்களுக்கும் அவரவர்களிடத்து நேரே ஸமாஸ்ர்யணம் பெற்றவர்கள், இப்போதில்லையாகையால் அவர்களுக்கு நாம் யாரும் திருவத்யயநம் கொண்டாடுவதில்லை. திருநசஷத்திரம் மட்டிலுமே கொண்டாடப்படுகிறது. ஆனால் மாமுனிகளுக்கு மட்டிலுமே பரமபதித்த அந்நாள் கொண்டாடப்படுகிறது. அதிலும் ஸ்ரீரங்கம் திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாமுனிகள் ஸந்நிதியில் தான் கொண்டாடப்படுகிறது.

மற்ற ஆசாரியர்களுக்கு இல்லாமலும் மற்ற திவ்ய தேசங்களில் மணவாள மாமுனிகளுக்கு இல்லாமலும், **கோயில் என்கிற ஸ்ரீரங்கத்தில் மட்டுமே திருவத்யயநம் கொண்டாடப்படுகைக்குக் காரணமாவது:**

**ஸ்ரீரங்கநாதன் மாமுனிகளை ஆசாரியனாகக்கொண்டு தான் அவருக்கு சிஷ்யனாய் திருவாய்மொழயின் வ்யாக்யானங்களை ஒரு வருடகாலம் அவரிடம் திருச்செவிசாத்தி சாற்றுமுறையன்றைக்கு தான் அவருக்கு சிஷ்யன் ஆனமை தோற்ற, ஓர் பாலனாய் ஸ்ரீசைலேஸதாயபாத்ரம் என்னும் தனியனை அருளிச்செய்தான் என்பது ப்ரஸித்தம். அது முதல் மாமுனிகளின் வருட திருநசஷத்திரம் தோறும் பெரியபெருமாள் ஸ்ந்நிதியிலிருந்து விசேஷ பஹுமாநம் வந்து மாமுனிகளின் திருநசஷத்திர பரிபாலநம் நடத்தப் பட்டுவருகிறது. அதேபோல மாமுனிகள் பரமபதித்த நாள் தொடங்கி வருடந்தோறும் மாமுனிகள் பரமபதித்த நாளான மாசி க்ருஷ்ண த்வாதசியன்று பெரியபெருமாள் ஸந்நிதியிலிருந்து விசேஷ பஹுமாநம் வந்து திருவத்யயநோத்ஸவமும் கொண்டாடப்படுகிறது.**

மாமுனிகள் பரமபதித்தபோது பெரியபெருமாள் தான் அவருக்கு ஸிஷ்யன் அனமை தோற்ற ப்ரதிவருடமும் திருவத்யயநம் (தீர்த்தம்) கொண்டாட வேண்டும் என நியமித்தாராம். மாமுனிகளிடம் ஆச்ரயித்த சிஷ்யரான ரங்கநாதன் இன்றைக்கும் எழுந்தருளியிருப்பதால் ஸ்ரீரங்கத்தில் மட்டுமே மாமுனிகள் சந்நிதியில் மாமுனிகளுக்குத் திருவத்யயநம் (தீர்த்தம்) கொண்டாடப்படுகிறது.

ஸ்ரீரங்கத்தில் மாமுனிகளின் தீர்த்தம் கொண்டாடும் விதம்

தீர்த்தத்தின் முதல் நாள் இரவு 7 மணி அளவில் மாமுனிகள் சந்நிதியில் திருவாய்மொழி தொடக்கமாகி முதல் இரண்டு பத்துக்கள் மட்டிலும் சேவிக்கப்படுகிறது. அப்போது கோஷ்ட்டிக்குத் தீர்த்தம், வடை, திருபணியாரம், சுண்டல் விநியோகமாகிறது.

மறுநாள் காலை 10 அணி அளவில் தொடங்கி திருவாய்மொழி பூர்ணமாய் சேவிக்கப்டுகிறது. அப்போது ஸ்ரீரங்கநாதன் சந்நிதியிலிருந்து ப்ரசாதம் உடுத்துக்களைந்த திருப்பரியட்டம், திருமாலை முதலியன வாத்யத்துடன் கைங்கர்யபரர்களால் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரப்பட்டு மாமுனிகளுக்குச் சாத்தப் படுகின்றன. **பெரிய சந்நிதி அர்ச்சகர்** எழுந்தருளி மாமுனிகளுக்கு ப்ரசாதங்களை அமுது செய்யப் பண்ணுவர். பிறகு கோஷ்டிக்குத் தீர்த்த ப்ரசாதங்கள் விநியோகிக்கப்படுகின்றன. திருவாய்மொழி சாற்றாகிறது. கோஷ்டிக்கு மட்டிலும் பொன்டியானாகி கோஷ்டி கலைகிறது.

மறுபடியும் மணவாளமாமுனிகள் கர்ப்பக்ருஹத்துக்கு பின்புள்ள மணவாளமாமுனிகள் காலசேஷபம் சாதித்த இடம் (திருமலையாழ்வார்), மாமுனிகள் பரமபதித்த இடம் ஆகையாலே அங்கு அத்யாபகஸ்வாமிகளால் கோயில் திருவாய்மொழி, இராமாநுச நூற்றந்தாதி, உபதேச ரத்தினமாலை மற்றும் திருவாய்மொழி நூற்றந்தாதிகள் சேவிக்கப்பெற்று அங்கிருந்து வந்து மாமுனிகள் முன்பே சாத்தாகி கோஷ்க்குத் தீத்தமும், பொன்னடியானும் சாதிக்கபட்டு தொட்டி ப்ரசாத விநியோகத்துடன் மாமுனிகள் திருவத்யயந (தீர்த்த) உத்ஸவம் நிறைவு பெருகிறது.

## வாழித்திருநாமம்

இப்புவியி லரங்கேசர்க் கீடளித்தான் வாழியே
எழில் திருவாய்மொழிப்பிள்ளை யிணையடியோன் வாழியே
ஐப்பசியில் திருமூலத் தவதரித்தான் வாழியே
அரவரசப் பெருஞ்சோதி யநந்தனென்றும் வாழியே
எப்புவியும் ஸ்ரீசைல மேத்தவந்தோன் வாழியே
ஏராரு மெதிராச ரெனவுதித்தான் வாழியே
முப்புரிநூல் மணிவடம் முக்கோல் தரித்தான் வாழியே
மூதரிய மணவாள மாமுனிவன் வாழியே.

## நாள் பாட்டு

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீருல காரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடுநாள்
மந்த மதிப்புவி மானிடர் தங்களை வானி லுயர்த்திடுநாள்
மாசறு ஞானியர் சேரெதி ராசர்தம் வாழ்வு முளைத்திடுநாள்
கந்த மலர்ப்பொழில் சூழ்குரு காதிபன் கலைகள் விலங்கிடுநாள்
காரமர் மேனி யரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர் மணவாளமுனிப்பர னவதாரம் செய்திடுநாள்
அழகு திகழ்ந்திடு மைப்பசியில் திருமூலமதெனுநாளே.

## மங்களம்

அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ
சடகோபன்தண் தமிழ்நூல்வாழ – கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாளமாமுனியே
இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்.

ஸ்ரீமதே ரம்ய ஜாமாத்ரு முநீந்த் ராய மஹாத்மநே /
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீ நித்யமங்களம் //

துலா மூலாவதீ ர்ணாய தோஷிதாகில ஸூரயே /
ஸௌம்யஜாமாத்ரு முநயே ஸேஷாம் ஸாயாஸ்து மங்களம் //

மங்களாஸாஸன பரை: மதாசார்ய புரோகமை:
ஸர்வைஸ்ச பூர்வை ராசார்யை: ஸத்க்ருதாயாஸ்து மங்களம்

பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: சஷந்தவ்ய: